அம்மையகரம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு.வ.சிவஞானம்.,

ந.க.எண்: ஊ.நி–1 / 36 /2023 நாள்:10.08.2023

பொருள் மனைவரன்முறை செய்தல் – சின்னசேலம் ஊராட்சி ஒன்றியம் – அம்மையகரம் ஊராட்சி – சர்வே எண். 2/1Bல் 94612 சதுர அடி (2.17 ஏக்கர்) பரப்பளவில் 1–29 மனைகளை வரன் முறை செய்து உத்திரவிடல் – தொடர்பாக.

பார்வை
1. திரு.எல்.சுப்ரமணி மற்றும் ஆர்.இளையப்பன் அம்மையகரம் என்பவர்களது விண்ணப்ப நாள்: 17.05.2023.
2. அரசு ஆணை எண் 255 ஊரக வளர்ச்சித் துறை (சி2) நாள்.18.08.1997.
3. அரசாணை எண்.79. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(3)) துறை நாள்: 04.05.2017
4. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ந.க.4050/2018/விம நாள்: 15.10.2018.
5. தலைவர், அம்மையகரம் ஊராட்சி அவர்களின் தீர்மான எண். 36 /2023, நாள்: 10.08.2023.

.....

உத்தரவு

சின்னசேலம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அம்மையகரம் ஊராட்சி சர்வே எண்.2/1Bல் 8800 ச.மீ (2.17 ஏக்கர்) பரப்பளவில் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைபிரிவு மனை எண்கள் 1 முதல் 29 வரை வரன் முறைப்படுத்துதல் தொடர்பாக அனுமதி கோரி பார்வை 1ல் காணும் கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார். பார்வை 4–ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்: 4050/2018/விம நாள்:15.10.2018 மற்றும் அரசாணை எண்.79. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்(UD4(3))துறை நாள்: 04.05.2017ன் விதி எண்.9 மற்றும் 3ன்படி அனுமதி கோரும் இடத்தின் சந்தை மதிப்பில் 94612 சதுர அடிக்கு 3 சதவீத தொகை ரூ.425754/–ம் 17.05.2023 தேதியில் சம்மந்தப்பட்ட அரசுதலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது மற்றும் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றிற்கு ரூ.1000 வீதம் 94612 சதுர அடியில் 1 முதல் 29 மனைக்கு ரூ.29000/–ம் 17.05.2023 தேதியில் சம்மந்தப்பட்ட ஊராட்சி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு 1994 ஆம் வருட ஊராட்சிகள் சட்டம் பிரிவு 2(சி) ன் படியும் பார்வை 2–ல் காணும் அரசாணையின் படி மனைப்பிரிவு வரன்முறை செய்ய பார்வை–4ல் காணும் ஊராட்சிமன்ற தலைவர், அம்மையகரம் அவர்களால் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் சர்வே எண். 2/1Bல் எண்ணிடப்பட்ட 1–29 அனுமதியற்ற மனைப்பிரிவு மனை எண்களை கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

விண்ணப்பதாரர் பெயர்	...	திரு.எல்.சுப்ரமணி மற்றும் ஆர்.இளையப்பன்,
முகவரி	...	பாக்கம்பாடி மேற்கு காட்டுக்கொட்டாய்
மனைப்பிரிவு அமையும் இடம்	...	அம்மையகரம்
மனைப்பிரிவு அமையும் சர்வே எண்	...	2/1B
பரப்பளவு	...	94612 சதுர அடி (அ) 2.17 ஏக்கர்
மனை எண்கள்	...	1 முதல் 29 வரை

L. Subramanian

R. இளையப்பன்

நிபந்தனைகள்

- நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், விழுப்புரம் அவர்களின் ந.க.எண்: 1555/2019/விம நாள்:15.10.2018 உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி அனுமதி வழங்கப்படுகிறது.
- ஊராட்சிக்கு சொந்தமான நிலத்திலும், தெருவிலும், சாலைகளிலும், அரசுக்கு சொந்தமான இடத்திலும், சாலைகளிலும், பொது இடங்களிலும் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது, வீட்டு வாசற்படிகள் முதலியவைகள் விண்ணப்பதாரரின் சொந்த இடத்தில் தான் இருக்க வேண்டும், வெளிப்பக்கம் திறக்கும் படியாக இருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டுமிடத்தில் உரிமை சம்பந்தமான வில்லங்கங்களுக்கு ஊராட்சி பொறுப்பல்ல.
- கழிப்பறை , சாக்கடை, தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி எளிதாக சுத்தம் செய்ய ஏதுவான வகையில் அமைக்கப்பட வேண்டும். வீட்டிலிருந்து வெளியேறும் கழிவுநீர் தெருசாலையை பாதிக்காமல் ஊராட்சி வடிகாலில் சேரும் வகையில் நிர்மானிக்கப்பட வேண்டும். வீட்டின் கூரைகள் தெருப்பக்கம் வெளியே நீட்டப்பட்டிருக்கக்கூடாது.
- கட்டிடம் கட்டி முடிக்கப்படுவதுடன் அதில் குடியேறும் முன் அதன் விபரத்தை தனி அலுவலர்/ஊராட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
- மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும்
- உரிம நிபந்தனைகளுக்கும், உரிமம் பெற்ற வரை படத்திற்கும் மாறாகச் செய்வதாலும் ஊராட்சி கட்டிட விதிகளுக்கும் அல்லது வேறெந்த சட்ட / திட்டங்களுக்கும் மாறான வழியில் உரிமம் பெற்றிருந்தாலும் இந்த உரிமை தள்ளுபடி செய்யப்பட்டதாகக் கருதப்படும்.
- வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம் என்ற திட்டத்தின் கீழ் குறைந்தபட்சம் ஒரு மரம் வளர்க்க வேண்டும்.
- நவீன கழிப்பிடம் அமைக்கப்பட வேண்டும்.

V. திருஞானம்
ஊராட்சி மன்ற தலைவர் 10.8.23
அம்மையகரம்.

துணைத்தலைவர்
அம்மையகரம் ஊராட்சி.

பெறுதல்:

திரு.எல்.சுப்ரமணி மற்றும் ஆர்.இளையப்பன்,
அம்மையகரம்.

நகல்: இருப்பு கோப்புக்கு.

நகல்:

1. சார்பதிவாளர், சின்னசேலம் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், கள்ளக்குறிச்சி அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. உதவி இயக்குநர்(ஊராட்சிகள்) கள்ளக்குறிச்சி அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.

L. Subramanian
R. இளையப்பன்